வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 14 / 2024**

வழக்கு சாட்சி **PW 1**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருகே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனியம்மாள் | தொழில் | : வேலை இல்லை |
| தந்தை பெயர் | : ஆறுமுகசெட்டியார் | கணவர் பெயர் | : நாச்சிமுத்து |
| கிராமம் | : அன்னூர் | வயது | : சுமார் 75 |
| தாலுக்கா | : அன்னூர் | நாள் | : 22.07.2025 |
| மாவட்டம் | : கோயம்புத்தூர் | | |

முதல் விசாரணை:

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், அன்னூர் டவுன், உப்புத்தோட்டம், 4வது வீதியில் வசித்து வரும் நாச்சிமுத்து மனைவி சுமார் 75 வயதுள்ள பழனியம்மாள் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிருபண பிரமாண வாக்கு மூலம்.

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை எனது தரப்பில் ஏற்றுக் கொண்டு தாவா படி தீர்ப்பாக வேண்டுகின்றேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 22.07.1935 | ஆறுமுகம் செட்டியார் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் - சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.1 |
| 02 | 06.10.1937 | மல்லிசெட்டியார் மகன் கருப்பஞ்செட்டியார் பெயரில் உள்ள பாகபாத்திய விடுதலை பத்திரம் - சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |
| 03 | 24.06.1992 | ஆறுமுகச்செட்டியார் இறப்பு சான்றிதழ் - சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.3 |
| 04 | 14.01.2011 | நாச்சம்மாள் இறப்பு சான்று - சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.4 |
| 05 | 28.12.2023 | பட்டா எண்.9 நில உரிமை விபரப்பட்டியல் - கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.5 |

| | | | |
|---|---|---|---|
| 06 | 28.12.2023 | ஆறுமுகம் செட்டியார் பெயரில் உள்ள நத்த நிலவரி திட்ட துாயசிட்டா - உண்மை நகல் | வா.சா.ஆ.6 |
| 07 | 16.12.2023 | தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு | வா.சா.ஆ.7 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு நீதிமன்றம் சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:

குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.22 19:07:40 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்